பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 18 | திங்கட்கிழமை | 01.04.2024 | அதிர்வு 244

## எரிபொருள்களின் விலை நள்ளிரவு முதல் குறைப்பு



எரிபொருள்களின் விலையில் நேற்று நள்ளிரவு 12 மணி முதல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 06

## ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்:

# மைத்திரியின் வாக்குமூலம் வெளிச்சத்துக்கு

## சீனாவால் கோபமடைந்த நாடு எது?




**உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை நடத்தியது யார் என்ற தகவலை இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதரகம் ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட அடையாளம் தெரியாத நபரே தன்னிடம் கூறினார் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சி.ஐ.டியிடம் கூறியுள்ளார் என்று அறியமுடிகின்றது.** 06

## மைத்திரியிடம் தகவல் சொன்ன

# மர்ம நபரை தேடும் சி.ஐ.டி.



ஈஸ்டர் தாக்குதலை நடத்தியது யாரென்ற தகவலை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கூறிய அந்த மர்ம நபரைச் சி.ஐ.டியினர் இப்போது தேடத் தொடங்கியுள்ளனர்.

வெளிநாட்டுத் தூதரகம் ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போதே இந்தத் தகவலை அவர் கூறினார்

என்று மைத்திரி, 06

# கோர விபத்து ஆசிரியை சாவு!

## மூவர் படுகாயம்



(எம்.எப்.எம். அலி)

கார் ஒன்று வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலியாகியுள்ளார். மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர். 06

# வெடுக்குநாறிமலை அராஜகத்தால் நல்லிணக்க முயற்சிக்குப் பாதிப்பு!

## சிறந்த இலங்கைக்கான சங்க மன்றமும் உலகத் தமிழர் பேரவையும் கடும் கவலை



வெடுக்குநாறிமலை ஆதிசிவன் கோயிலில் அரங்கேறிய அராஜகம் உள்ளிட்ட சம்பவங்களால் நல்லிணக்க முயற்சிகள் பாதிக்கப்படுகின்றன என்று பௌத்த துறவிகளின் சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகியவை கவலை 06




வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் ஒரு பொது வேட்பாளரை களம் இறக்க வேண்டும் என்ற கோரிக்கைதான் இப்போது தமிழர் அரசியலில் பிரதான பேசுபொருள்.

கடந்த தடவைகள் ஜனாதிபதித் தேர்தல் சமயங்களில் எல்லாம் கருக்கட்டிய இத்தகைய திட்டம், உருப்பெற முன்னரே கருகி விழுந்து விடுவதுதான் வழமையாக இருந்து வந்துள்ளது. இந்த முறையும் அந்த நிலைமை போலவே தோன்றுகின்றது.

சரியோ, பிழையோ இந்த முடிவுக்குத் தமிழர் தரப்பில் பிரதான கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி இணங்கி 06



# தரை வழிப் பால நிர்மாணச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு இலங்கை - இந்தியக் குழு

## இரு தரப்புகளின் சந்திப்பில் இணக்கம்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான தரை வழிப் பாலத்தினை நிர்மாணிப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இலங்கை சார்பில் பிரதிநிதிகள் குழுவொன்றை நியமிக்குமாறு இந்தியா இலங்கையிடம் கோரியமைக்கு இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் வெளிவிவகார செயலாளர் வினய் மோகன் குவத்ரா தலைமையிலான குழுவினருக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையிலான குழுவினருக்கும் இடையில் கடந்த 27 மற்றும் 28 ஆகிய இரண்டு நாகள் புதுடில்லியில் கலந்துரையாடல் நடைபெற்றிருந்தது. இதன்போதே மேற்கண்டவாறு இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு அப்போது பிரதமராக இருந்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்திய போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்காரிக்கும் இடையில் தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையில் தரை வழிப்பாலம் ஒன்றை அமைப்பதற்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், சுமார் ஒரு தசாப்த காலமாக முன்னெடுக்கப் பட்டுவரும் இந்த விடயம் சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் கடந்த ஆண்டு ஜுன் மாதத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் பேச்சுக்களை நடத்தியபோது மீண்டும் இரு நாடுகளுக்கும் இடையிலான இணைப்பு பற்றிய இணக்கப்பாடுகள் எட்டப்பட்டிருந்தன.

அதனைத் தொடர்ந்து, பாலம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், இலங்கையின் தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரையில் அமைக்கப்படவுள்ள இந்தப் பாலம் 23 கிலோ மீற்றர் நீளத்தினை கொண்டுள்ளதாகும். இதில் வீதி மற்றும் ரயில் பாதை என்பனவும் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பலத்த பாதுகாப்புக்கு மத்தியிலேயே மட்டக்களப்பில் ஈஸ்டர் ஆராதனை







**(கனகராசா சரவணன், பழுவூரான்)**

மட்டக்களப்பில் ஈஸ்டர் தினமான நேற்று ஞாயிற்றுக் கிழமை அனைத்து தேவாலயங்களிலும் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் விசேட ஆராதனைகள் இடம்பெற்றன.

கடந்த 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி ஈஸ்ரர் ஞாயிறு தினத்தில் மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் உட்பட நாட்டில் கிறிஸ்தவ தேவாலயங்கள், உல்லாச ஹோட்டல்களில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பினரால் நடத்தப்பட்ட குண்டுதாக்குதலில் வெளிநாட்டவர்கள் உட்பட சுமார் 300 பேர்உயிரிழந்தனர்.

இந்த நிலையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்று 5 வருடங்களாகிய நிலையில் இந்த தாக்குல் தொடர்பான சூத்திரதாரிகள் கைது செய்யப்படவில்லை எனக் கொழும்புப் பேராயர் ரஞ்சித் மெல்கம் ஆண்டகை மற்றும் அரசியல்வாதிகள் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

முன்னர் குண்டுத் தாக்குதல் நடந்த மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் மற்றும் மாவட்டத்திலுள்ள பிற தேவாலங்களில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஈஸ்டர் விசேட ஆராதனை இடம்பெற்றது.

# தமிழ் மக்களின் உரிமைக் குரலாக ஓங்கி ஒலித்த பேரருட் கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகை

## மறைந்தாலும் மறையாத நினைவுகள் 3 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று

- வி.எஸ்.சிவகரன் -

இரண்டு தசாப்தத்திற்கு மேலாக தமிழர்களிற்காக ஓயாது உரிமைக் குரலாக ஓங்கி ஒலித்தவர் அமரர் பேரருட் கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகை.

மதம் கடந்து, ஒடுக்கப்பட்ட சமூகத்தின் மனச்சாட்சியாக – நீதியின் குரலாக – இடைவிடாது உண்மையை உரத்துப் பேசிய உத்தமர் அவர். தமிழ்த்தேசிய விடுதலை அரசியலில் ஆண்டகையின் வகிபாகம் இன்றியமையாதது. தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்டு, நாதியற்றுத் தவித்த சந்தர்ப்பங்களில் எல்லாம் நேரடியாக களத்திற்கே போனவர். அதுமட்டுமின்றி, துணிந்து, நிமிர்ந்து வீறுநடை போட்டவர். தமிழ்த் தேசியத்தையும் புலிகளையும் மானசீகமாக ஏற்றுக் கொண்டு விடுதலையை வென்றாக வேண்டும் என்று பெரும் பங்காற்றியவர். அவருக்கு ஏற்பட்ட சவாலான காலகட்டங்களில் கூட துணிந்து நின்று பல விசாரனைகளை கூட எதிர் கொண்டவர். சர்வதேச ரீதியாக இலங்கை அரசிற்கு பெரும் இராஜதந்திர நெருக்கடிகளை ஏற்படுத்தியவர்.


சுயநிர்ணய உரிமையே தமிழர்களுக்குத் தேவை என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தியவர். தடம் மாறாத தமிழ்த்தேசிய தளத்தில் வீறுநடை போட்டவர்.

தமிழர்களுக்கு இறுதி யுத்தத்தில் நடந்தது நன்கு திட்டமிட்டு கட்டமைக்கப்பட்ட மனித இன அழிப்பு என்று உறுதியுடன் பல்வேறு விதமான ஆதாரங்களை முன்வைத்து, இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் 2011/01/07 திகதி அன்று மன்னாரில் சாட்சியம் வழங்கும் போது உரத்த குரலில் அதட்டி கர்ஜித்தவர்.

ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டத்தால் வெளியிடப்பட்ட வன்னியின் மக்கள் தொகை புள்ளிவிவரத்தை ஆதாரமாகக் கொண்டு வன்னியில் 2009 ஆண்டு முற்பகுதியில் நான்கு லட்சத்து 29 ஆயிரத்து 59 பேர்(4,29,059) இருந்தனர். இவர்களில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்தவர்கள், காயமடைந்தவர்கள் 2 இலட்சத்து 82 ஆயிரத்து 38. நபர்கள் (2,82,380). ஆகவே மீதி ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் (1,46,679) எங்கே ? இவர்களை இனப்படுகொலை செய்து விட்டீர்கள் எனும் கேள்வியை எழுப்பி ல், சர்வதேச ரீதியாகப் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தினார். அதனால் இலங்கை அரசிற்கு சர்வ-தேச மனிதவுரிமை அமைப்புகள் பெரும் நெருக்கடி கொடுத்தன. அதன் விளைவாக பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவால் விசாரணைக்கு உள்ளானார்.

அரசால் மேற்கொள்ளப்பட்ட சகல உரிமை மீறல்களுக்கும் எதிராக நீதி கேட்டு பெரும் ஜனநாயகப் போர் தொடுத்தவர். பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் பாதுகாப்பு அரணாகத் துணை நின்றவர். பல விதமான மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டவர்.

மடுப்பகுதியில் மிக நீண்ட காலம் மக்களுக்கு அடைக்கலம் கொடுத்து உரிய ஏற்பாடுகளையும் முன்னின்று செய்தவர். குறிப்பாக மன்னாரில் நடக்கும் சகல விடயங்களிலும் தனது அக்கறையை செலுத்தியவர் . ஒரு நிழல் நிர்வாகத்தையே கொண்டு நடத்தியவர்.



பாதிக்கப்பட்ட பொதுமக்கள் பலர் மதம், கடந்து நீதி கேட்டுப் படையெடுத்தனர்.

யுத்தம் முடிவடைந்த பின்னர், "இராணுவமே! தமிழர் நிலத்தில் இருந்து வெளியேறு!" எனும் முதலாவது போராட்டம் மன்னாரில் 07/07/2012 நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு இராணுவத்திற்கு வடக்கு, கிழக்கில் இனி என்ன வேலை என அரசியல்வாதிகளை விட உரத்துப் பேசியவர்.

2007/01/02 திகதி இலுப்பைக் கடவை படகுத் துறையில் வசித்த மீனவக் குடும்பங்கள் மீது விமானக் குண்டுத் தாக்குதல் நடத்தியதில் பெண்கள்,சிறுவர்கள் உட்பட பதினாறு பேர் கொல்லப்பட்டு, 34பேர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் நடந்து சில மணி நேரத்தில் உரிய இடத்திற்குச் சென்று, நிலமையை அறிந்து, உடனடியாக கொழும்பு சென்று, அன்றலய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப்பெரும் வார்த்தைப் போர் நடத்தியவர். இவரின் அடுக்கடுக்கான கேள்விகளால் ஜனாதிபதி ராஜபக்ஷ சந்திப்பை இடைநடுவில் முறித்துக் கொண்டார். உண்மைக்காக நீண்ட – நெடிய – வாதம் செய்பவர்.

இலங்கை அரசு இவரை ஒரு கத்தோலிக்கத் தலைமை மதகுருவாகப் பார்க்காமல் புலிகளின் பேச்சாளர் என்றே கடும் விமர்சனம் செய்வதுண்டு.

வடகிழக்கில் இருந்த ஏனைய ஆயர்கள் இவரைப் போல் உரத்து குரலிட்டவர்கள் அல்லர். இவருடைய சித்தாந்தத்திற்கு எதிராகவே கர்தினால் மல்கம் ரஞ்சித் இருந்தார். இப்போதும் இருக்கிறார். சிங்கள இனவாதியாக அவருக்கும் இருவருக்கும் இடையில் அவ்வப்போது வார்த்தைப்போரும் நடப்பதுண்டு. ஆனாலும் தான் வரித்துக் கொண்ட கொள்கையில் இருந்து ஒரு போதும் பின்வாங்கியவர் அல்லர். அருட் தந்தையர்களையும் கொள்கையுடன் பயணிக்க நிர்பந்தித்தார். அதனால் சில விமர்சனங்களுக்கும் உள்ளானார். சிலரது பதவிகளையும் கூடப் பறித்தார். மத நிர்வாகத்திலும் கொள்கைக்கே முன்னுரிமை வழங்கினார்.

யுத்தத்திற்கு பின்னர் இராயப்பு யோசப் ஆண்டகை தமிழ்மக்கள் மத்தியில் பெரு நம்பிக்கைக்குரியவராக இருந்தார். தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளை அழைத்துப் பலமுறை ஆலோசனை கூறியும், சில தடவைகள் மிகவும் காட்டமாக கடிந்துன் கொண்டதும் உண்டு. சிவில் செயற்பாட்டாளர்களுக்குப் பெரு நம்பிக்கைக்குரியவராக திகழ்ந்தார். என்ன நடந்தாலும் மன்னார் ஆயர் இருக்கிறார் என்பதே பலரின் எதிர்பார்ப்பு. அதை பல சந்தர்ப்பங்களில் நிறைவேற்றியவர்.

ஏதிலிகளாக வருபவர்களை இன்முகத்தோடு வரவேற்று, உதய உதவிகளைச் செய்தவர். இலகுவாக கடந்து செல்ல முடியாத காலத்தின் பதிவுகள் அவை. மடுவை இராணுவம் கைப்பற்றப் போகின்றது என்றதும் மதாவின் திருச் சொரூபத்தை அங்கிருந்து இடம்பெயர்த்தி மக்களோடு மாதாவையும் துணிந்து அனுப்பியவர். அதனால் பல்வேறு விமர்சனங்களையும் எதிர்கொண்டார். இப்படி சாமி சிலையைக் கொண்டு சென்ற வரலாறு வேறு எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. அதையும் முற்போக்காகச் செயல்படுத்திக் காட்டியவர்

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந் நான்கும் எஞ்சாமை வேந்தர்க்கியல்பு" எனும் வள்ளுவ வாக்கை போல் உறுதியான திடமான தலைமைத்துவம் வழங்கியவர்.

அவரது நாளாந்த பணியில் சமய விடயங்களுக்கு செலவிட்ட நேரத்தை விட தமிழின விடுதலைக்காகவே அதிக நேரத்தைச் செலவிட்டார்.

ஓய்வுக்குப்வ்பின்னர் முழுமையாக தமிழ்மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்காகப் பணி செய்யப்போவதாகவே எண்ணியிருந்தார்.

காலம் யாரை தான் விட்டு வைத்தது? யாருமே எதிர்பார்க்காத வகையில் முடங்கிப் போவார் என்று யார் எதிர்பார்த்தனர்? எனவே அது விதியா, இல்லை சதியா எனும் கேள்விக்கு எவ்விடத்திலும் பதில் இல்லை. இவருடைய இழப்பு தமிழினத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பு. இன்றும் அது வெற்றிடமாகவே உள்ளது. எவராலும் நிரப்ப முடியவில்லை. நிரப்பவும் மாட்டார்கள். உணர்திறன் உரிமை தானாகவே தோன்ற முடியும்.

ஆகவே பலர் இறந்து விடுகிறார்கள். சிலர் மட்டும் மரணித்துப் போகிறார்கள். இறப்பவர் மறக்கப்படுகிறார். மரணிப்பவர் மக்கள் மனதில் நிலைவாழ்வு பெறுகிறார்கள். தமிழ்தேசிய வரலாற்றில் ஆயர் எப்போதும் முதன்மையிடம் பெறுவார்.

இறந்தாலும் இறவா நிலையில் அவர் நினைவுகள் நிழலாடுகின்றன.

# மாவடிவேம்பில் நேற்று விபத்து ஒருவர் சாவு; ஒருவர் படுகாயம்



மட்டக்களப்பு – திருகோணமலை பிரதான வீதியின் மாவடி வேம்பு பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ர்ஆர் என சந்திவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாதசாரிகள் கடவைக்கு அண்மித்த பகுதியிலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. மிக வேகமாகச் சென்ற தனியார் பஸ் ஒன்று வீதியைக் குறுக்கிட்ட மோட்டார் சைக்கிளை மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் சென்ற முறக்கொட்டாஞ்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 55 வயதுடைய தங்கராசா ஜெயம் என்ற கூலித்தொழிலாளி பலியாகியுள்ளார் எனவும், மோட்டார் சைக்கிளைச் செலுத்தி யவர் படுகாயமடைந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாவடிவேம்பு பிரதேசத்திலிருந்திலுள்ள தோட்டம் ஒன்றில் தேங்காய் பறித்துவிட்டு தோட்ட உரிமையாளருடன் மோட்டார் சைக்கிளில் சித்தாண்டிப் பகுதியை நோக்கிச் செல்வதற்காக பிரதான வீதியைக் குறுக்கிட்ட வேளை அக்கரைப்பற்றிலி ருந்து திருகோணமலை நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது.

பஸ்ஸின் சாரதி சந்திவெளி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மரணமடைந்தவரின் சடலம் சந்திவெளி வைத்தியசா லையில் ஒப்படைக்கப்பட்டிருந்த வேளை திடீர் மரணவிசார ணையதிகாரி எம்.எஸ்.எம். நஸிர் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டு, மரணவிசாரணைகளை ஆரம்பித்தார்.

மரணமடைந்தவரின் மனைவி மற்றும் மகள் ஆகியோர் சடலத்தை அடையாளம் காட்டிய பின்னர் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்திசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

# ஆற்றில் நீராடச் சென்ற பெண் முதலையின் தாக்குதலில் சாவு



கலங்குட்டிவ ஆற்றில் நீராடச் சென்ற பெண் ஒருவர் முதலை தாக்கி உயிரிழந்துள்ளார் என மெகலேவ பொலிஸார் தெரிவித்தள்ளனர்.

லிகொலவெவ, சியம்பலங்காமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனவும், அந்தப் பெண் ஆற்றில் நீராடச் சென்ற போதே இச்சம்பவம் நேர்ந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித் தனர்.

பிரதேசவாசிகள் முதலையிடமிருந்து பெண்ணை மீட்டு தம்புத்தேகம வைத்தியசாலையில் சேர்த்த போதும் அப்பெண் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# துப்பாக்கியை வைத்திருந்த மூவர் கலஹாவில் சிக்கினர்

கலஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புப்புரஸ்ஸ, நுவரெலியா பிரதான வீதியில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை வைத்திருந்த மூவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கம்பளை விஷேட அதிரடிப்படை அதிகாரிகள் நேற்று முன்தினம் இரவு திடீரென யுக்திய வேலைத்திட்டதின் கீழ் கலஹா பகுதியில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது .

அவசர தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படை அதிகாரிகளினால் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

அனுமதி பத்திரம் இல்லாமல் வைத்திருந்த – வெளி நாட்டில் தயாரிக்கப்பட்ட – துப்பாக்கி மற்றும் ரவைகள், ஓட்டோ ஆகியவற்றை இதன் போது விஷேட அதிரடி படை யினர் கைப்பற்றியுள்ளனர்.



கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் கலஹா பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# கார்த்திகைப் பூ, யுத்த டாங்கி வடிவங்களில் இல்லங்களை அலங்கரித்தமையால் சிக்கல்

## பாடசாலை நிர்வாகத்தை நோண்டுகின்றது பொலிஸ்

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடம்பெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியின் இல்ல அலங்கரிப்புத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

யூனியன் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

அதன் போது, கார்த்திகைப் பூ வடிவிலும், போர் டாங்கி வடிவிலும், இல்ல அலங்கரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அவை தொடர்பிலான படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி இருந்தன.

அது தொடர்பில் நேற்று முன்தினம் விளையாட்டு போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையே பொலிஸார், இராணுவ புலனாய்வாளர்கள் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினர் பாடசாலைக்கு நேரில் சென்று இல்லங்களைப் பார்வையிட்டு, படங்கள், காணொளிகள் என்பவற்றை எடுத்தனர்.

அத்துடன் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் நிலையத்திற்கு வருகை தருமாறு பாடசாலை நிர்வாகத்திற்கு அறிவுறுத்தி இருந்தனர்.

இந்நிலையில் அதிபர் உள்ளிட்டவர்கள் பொலிஸ் சென்றனர். பொலிஸார் அவர்களிடம் வாக்குமூலங்களைப் பெற்ற பின்னர் அவர்களை விடுவித்து இருந்தனர்.

இதேவேளை அண்மையில் கிளிநொச்சி மாவடத்தில் உள்ள பாடசாலை ஒன்றில், இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியில் இல்ல அலங்கரிப்பு மற்றும் விநோத உடை போட்டிகள் தொடர்பிலான படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி சர்ச்சைகள் ஏற்பட்டமையை அடுத்து, வடமாகாணக் கல்வி அமைச்சு பாடசாலை அதிபர்களுக்கு , இல்ல அலங்கரிப்பு மற்றும் விநோத உடைப் போட்டிகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வராவிட்டால் அந்த முயற்சி படுத்து விடும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

இத்திட்டத்தை தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் நிராகரித்து விட்டார் என்ற சாரப்பட செய்திகள் வெளியாகியுள்ளன.

இவ்விடயத்தை ஒட்டி வெளிப்படையாகக் கருத்து கூறக்கூடிய சுகத்தில் – தெளிவில் – சம்பந்தன் இருக்கின்றாரா என்று சில வட்டாரங்கள் நியாயமான கேள்வியை எழுப்பினாலும், அவ்விடயத்தை ஒட்டி சம்பந்தன் வெளியிட்டவை என வெளியாகி உள்ள கருத்துக்கள் சம்பந்தனின் வழமையான நிலைப்பாட்டை ஒட்டியவை என்பதால் அவற்றை அவரது கருத்தாகவே நம்ப வேண்டியுள்ளது.

இதற்கிடையில் –

இவ்விடயத்தை ஒட்டி தமிழரசுப் பிரமுகர் சுமந்திரனும் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

இந்த விடயம் தொடர்பில் தமிழரசுக் கட்சி இன்னும் கூடி முடிவு செய்யவில்லை, முடிவு செய்யும்போது பார்த்துக் கொள்ளலாம் என்ற சாரப்பட சுமந்திரன் கூறினார் என்று ஓரிரண்டு நாள்களுக்கு முன் செய்திகள் வெளியாகியிருந்தன.

அதேபோன்ற பேட்டித் தகவல் ஒன்றை 'டான்' டி.விக்கு சுமந்திரன் வழங்கியிருக்கின்றார். அது நேற்று ஒளிபரப்பானது.

பொதுத் தமிழ் வேட்பாளர் பற்றிய கேள்வி எழுந்ததும் "ஏன் சிவாஜிலிங்கத்தை நிறுத்தப் போகின்றீர்களா?" – என்ற கிண்டலுடன்தான் சுமந்திரனின் பதில் தொடங்கியது.

இன்னும் கட்சி முடிவு செய்யவில்லை. நிலைமை வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்ற பாணியில் பதில் இருந்தாலும், அத்தகைய திட்டத்துக்கு – அதாவது தமிழ்ப் பொது வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் இறக்கும் திட்டத்திற்கு – ஆதரவு அளிக்கும் போக்கு அவரிடம் தென்படவில்லை. அப்படி இறக்கினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை – பாதிப்புகளை – அவர் விவரிக்கின்றமையை நோக்கும் போது, தமிழ்ப் பொது வேட்பாளர் திட்டத்திற்கு தமிழரசு ஒத்துவராது என்றே தோன்றுகின்றது.

இது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கருத்தமர்வு ஒன்றில் பங்குபற்றிய தமிழரசுப் பிரமுகர் சிறீதரன் எம்.பியிடமும் கருத்துக்கூற வற்புறுத்தினர்.

சிறீதரனும் பிடி கொடுக்காமல்தான் பேசினார். அப்படி ஒரு திட்டம் எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளாலும் முன்வைக்கப்பட்டால் அப்போது பார்க்கலாம் என்பது அவரது நிலைப்பாடாக இருந்தது. அத்தகைய யோசனையை அவர் எதிர்க்கவில்லை. ஆயினும் வரவேற்கவும் இல்லை என்பதையும் கவனிக்க வேண்டும்.

பொது வேட்பாளரை நிறுத்தும் யோசனைக்குத் தமிழரசு கட்சியின் எந்த மூத்த தலைவரிடம் இருந்தும் இதுவரை தலையசைப்பு வரவில்லை.

அக்கட்சியின் எல்லாத் தலைவர்களுமே இத்திட்டம் – இவ்விடயம் – தொடர்பில் ஒரே ஆவர்த்தனத்தில் வாசிப்பவர்களாகவே தோன்றுகின்றது.

இத்திட்டத்துக்கு தமிழரசின் ஆதரவை பெறுவதுபுலிப்பால்கறக்கும்வேலையாகத்தான் இருக்கும்...!

## வெடுக்குநாறிமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் அந்த அமைப்புக்கள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதிசிவன் கோயிலில் மகா சிவ ராத்திரி விரத நாளன்று பாதுகாப்புப் படையினர் பக்தர்களுக்கு உணவு, நீர் மற்றும் அடிப்படைத் தேவைகள் வழங்கப் படுவதைத் தடுத்ததுமல்லாது கோயில் அர்ச்சகர்கள் உட்பட பக்தர்களை அவமானப்படுத்தும் வகையில் அகற்றித் தடுப்புக்காவலில் வைக்குமளவுக்கு மிக மோசமாக நடந்துகொண்ட சம்பவம் குறித்து பௌத்த துறவிகளின் சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகியன ஆழ்ந்த கவலை கொண்டுள்ளன.

இங்கும் இதர இடங்களிலும் வாழும் மக்களின் பல்நூற்றாண்டுக் கலாசாரப் பண்பாடுகளையும் நடைமுறைகளையும் அழித்துவிட்டு பெரும்பான்மையினரின் அடையாளங்களையும் நடைமுறைகளையும் திணிக்கும் அரசின் அகன்ற திட்டம் சிறுபான்மைச் சமூகங்களிடையே அச்சத்தையும் சந்தேகங்களையும் தோற்றுவிக்கின்றது என்ற வரலாற்றை நாம் அறிந்துள்ளோம். இதைச் சாதிக்கத் தொல்லியல் திணைக்களம் ஒரு கருவியாகப் பாவிக்கப்படுகின்றது.

பல ஆண்டுகளாக நடத்தப்பட்டுவரும் சாமப் பூஜைக்கான அனுமதி வழங்கப்பட்டதா? இல்லையா? என்ற விடயத்தில் முரண்பாடான தீர்மானங்களை எடுப்பதற்கு நீதிமன்றங்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

இங்கு மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்த பக்தர்கள் அவமானப்படுத்தும் வகையில் முரட்டுத்தனமாகக் கையாளப்பட்டமையே.

இவ்விடயத்தில் கோயில் இருப்பிடம் சிதைக்கப்பட்டதென்பதற்குப் பொலிஸார் ஆதாரம் தரமுடியாமையினாலும் அக்கோயிலில் வழிபாடு செய்வதற்கான சட்டரீதியான அங்கீகாரம் ஏற்கெனவே வழங்கப்பட்டிருந்தமையினாலும் கைது செய்யப்பட்டவர்கள் நீதிபதியால் விடுதலை செய்யப்பட்டமை ஆறுதல் தருவதாக உள்ளது.

பாதுகாப்பு நிர்வாகத்தால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் கடத்தல்கள், சட்டத்துக்குப் புறம்பான தடுத்துவைப்புகள், துன்புறுத்தல்கள் பற்றி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் போக் கெர் ரேர்க் அளித்த வாக்குமூலத்திற்கு அமைய அவரது கரிசனைகளை மேற்கூறிய சம்பவம் உறுதிப்படுத்துவதாக உள்ளது. இது ஒரு அலுவலகத்தை உருவாக்கப்போகின்றோமென்பதுட்பட நல்லிணக்கத்துக்கான முயற்சிகளை எடுப்பதாக அரசு காட்டிவரும் முனைப்புக்கு எதிரானதாகவே பார்க்கப்படும்.

இலங்கையில் அனைத்து சமூகங்களின் மத்தியில் மத ஒற்றுமையை முன்னெடுக்க மன்றம் மற்றும் பேரவை எடுத்துவரும் முயற்சிகளை இப்படியான சம்பவங்கள் குலைத்துவிடுமோ என்ற அச்சமும் எங்களுக்குக் கரிசனை தருவதாக உள்ளது.

இவ்வருடப் பின்பகுதியில் தேர்தல்கள் நடைபெறுவதற்கான சந்தர்ப்பம் நிலவும் இவ்வேளையில் வாக்குச் சேகரிப்புக் காரணமாக சில நாசகார சக்திகள் கலகத்தைத் தூண்டிவிடக்கூடும் என்பதால் எதிர்காலத்தில் இப்படியான சம்பவங்கள் நடைபெறாது தவிர்க்க அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், சட்ட மற்றும் பாதுகாப்பு நிர்வாகங்கள் மிகவும் முன்னெச்சரிக்கையோடு செயற்படவேண்டுமென நாம் கேட்டுக்கொள்கின்றோம்." – என்றுள்ளது.

## மர்ம நபரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

சி.ஐ.டியினரிடம் கூறியிருந்தார்.

சி.ஐ.டியினர் இப்போது அந்த நிகழ்வு இடம்பெற்ற இடத்தின் சி.சி.ரி.வி. வீடியோக்களைச் சோதித்துள்ளனர்.

## எரிபொருள்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்த விலை திருத்தத்தின்படி எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 7 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 440 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 72 ரூபாவால் குறைக்கப்பட்டு, 386 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 12 ரூபாவால் குறைக்கப்பட்டு 245 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன், ஒக்டேன் 92 ரக பெற்றோலின் விலை மற்றும் ஒட்டோ டீசலின் விலையில் மாற்றம் இல்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கோர விபத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்தக் கோர விபத்து எம்பிலிப்பிட்டிய, நோநாகம வீதியில் பெமினியன்வில பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

மாத்தறை பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் உயர்தர வர்த்தகப் பிரிவுக்குப் பொறுப்பான ஆசிரியையே விபத்தில் உயிரிழந்துள்ளார். அவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

தாய் (ஆசிரியை), தந்தை மற்றும் இரண்டு பிள்ளைகள் திருகோணமலையில் இருந்து அம்பாந்தோட்டைப் பகுதியில் உள்ள தமது வீட்டுக்கு பயணித்துக்கொண்டிருக்கையிலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த மூவரும் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நல்லாட்சி அரசு சீனாவுடன் நெருங்கிச் செயற்பட்டது. அதன் காரணமாக, கோபமடைந்த நாடே இந்தத் தாக்குதலை நடத்தியது என்று அந்த நபர் மைத்திரியிடம் சொன்னதாக மைத்திரி சி.ஐ.டியிடம் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த வாக்குமூலத்தைச் சி.ஐ.டியினர் சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கவுள்ளனர். அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட பின்னர் சட்டமா அதிபரின் ஊடாக அது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.




# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி கோரி கல்முனை வாழ் கிறிஸ்தவர்கள் கவனவீர்ப்பு

(பாறுக் ஷிஹான்)

கல்முனை வாழ் கிறிஸ்தவ மக்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு இது வரை நீதி கிடைக்கவில்லை எனவும், உடனடியாக விசாரணை மேற்கொள் ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்து கல்முனை திரு இருதயநாதர் ஆலயத்தின் முன்னால் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை உயிர்த்த ஞாயிற்றுக் கிழமையான நேற்று ஆராதனையின் பின்னர் மேற்கொண்டனர்.

இக்கவனவீர்ப்பு போராட்டம் வணக்கத்திற்குரிய போதகர் கிருபைராஜா தலைமையில் மாலை இடம்பெற்றது. அதில் பங்குபற்றியோர் எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பி, குறித்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு நீதி வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

போராட்டத்திற்குப் பொலிஸார் பாதுகாப்பு வழங்கினர்.

உயிர்த்த ஞாயிறுத் தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு 5 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் அதனை நினைவுகூர்ந்து நாடளாவிய ரீதியில் கிறிஸ்தவ தேவாலயங்களில் நேற்று விசேட திருபலிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.




# சேவை நயப்பு விழா

யாழ். உடுத்துறை மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெறும் வீரகத்தி இந்திரலிங்கத்தைக் கௌரவிக்கும் சேவை நயப்பு விழா இன்று நடைபெற வுள்ளது.

உடுத்துறை மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபர் கணபதிப்பிள்ளை திரவியகுமார் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் முற்பகல் 11.30 மணியளவில் இந்நிகழ்வு ஆரம்பமாகின்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் பாடசாலை சமூகத்தினரால் விழா நாயகன் கௌரவிக்கப்படுவார்.

அதனைத் தொடர்ந்து வாழ்த்துரைகளை வடக்கு மாகாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா. கந்ததாசன், வடமராட்சி முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் இ. ரவீந்திரன், முன்னாள் அதிபரும் பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான அ.சா. அரியகுமார், வவுனியா வெளிக்குளம் மகா வித்தியாலய அதிபர் பா.நேசராஜா ஆகியோர் ஆற்றுவார்கள்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இந்தக் கலாசாரம் வேண்டாம்!

தென்னிலங்கையில் பெரிய அளவில் பரவியிருக்கும் 'மசாஜ்' செய்யும் மையங்கள் எனப்படும் 'ஸ்பா'க்களின் கலாசாரம் தெய்வாதீனமாக தமிழர் தாயகத்தில் - வடக்கு, கிழக்கில் - பெரும்பாலும் காலூன்றவில்லை.

அந்த 'ஸ்பா' மையங்கள் தொடர்பாக அதிர்ச்சி தரும் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

போதைப்பொருள் பாவனையாளர், விற்பனையாளர்கள் மற்றும் பாதாள உலகக் குழுவினருக்கு எதிராக பொலிஸார் உட்படப் பாதுகாப்புத் துறையினர் தற்போது ஒன்றுபட்டு மேற்கொண்டு வரும் முக்கிய நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட போதைப்பொருள் வியாபாரி ஒருவருக்கு எய்ட்ஸ் எனும் எச்.ஐ.வி. தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

இவரிடம் துருவித் துருவி விசாரணை நடத்திய அதிகாரிகள் இவர் அடிக்கடி 'ஸ்பா' மையங்களுக்குச் செல்வதைக் கண்டறிந்துள்ளனர்.

இந்தப் பின்புலத்தில்தான் நீர்கொழும்புப் பிரதேசத்தில், நீர்கொழும்பு, கொச்சிக்கடை மற்றும் சீதுவைப் பொலிஸ் பிரிவுகளில் உள்ள 'ஸ்பா' மையங்கள் மீது ஒரே சமயத்தில் பாய்ச்சல் நடத்த மூன்று பொலிஸ் நிலையங்களும் கூட்டிணைந்து தீர்மானித்து, நடவடிக்கையில் இறங்கின.

'ஸ்பா' மையங்களை ஒட்டிப் போதைப் பொருள் பாவனை மற்றும் பாலியல் தொழில் மூலமான நோய்த் தொற்றுப் பரவல் ஆகியவை குறித்து துருவுவதே இந்த அதிரடி நடவடிக்கையின் திட்டமாக இருந்திருக்கின்றது.

இந்த மூன்று பொலிஸ் பிரிவுகளின் பொறுப்பதிகாரிகளின் ஒன்றிணைப்பில் 53 'ஸ்பா' மையங்கள் மற்றும் ஆரோக்கிய நிலையங்கள் என்ற பெயரில் இயங்கிய விபச்சார விடுதிகள் சுற்றி வளைக்கப்பட்டன.

இதன் விளைவாக 140 பெண்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர். அவர்களின் பலர் விபச்சாரத்தில் ஈடுபட்டிருக்கின்றமை தெரிய வந்துள்ளது.

அந்தப் பெண்களில் இருவருக்கு எச்.ஐ.வி. தொற்று இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது பற்றிய செய்திகள் தெற்கில் பரவத் தொடங்கியமையை அடுத்து பிற இடங்களில் இயங்கும் இத்தகைய 'ஸ்பா' மையங்கள் பெரும் நெருக்கடிகளையும் எதிர்ப்புகளையும் எதிர்கொள்ள, அவற்றிலும் பல மூடப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது.

'ஸ்பா' நிலையங்கள் எய்ட்ஸ் பரப்பும் மையங்களாகலாம் என்ற பய உணர்வு காரணமாக ஏற்கனவே இத்தகைய மையங்களில் பணியாற்றிய பெண்கள் பலர் அந்த இடங்களில் இருந்து வெளியேறுகின்றமையும் 'ஸ்பா' மையங்களுக்கு நெருக்கடியாக வந்திருக்கின்றது.

'ஸ்பா' மையங்கள் மூடப்படுவது கலாசார ரீதியில் நல்ல விடயம் என்றாலும், அவற்றில் பணியாற்றியோர் தெளிவான வலைப்பின்னல் மூலம் பரிசோதிக்கப்பட்டு, ஸ்கிரீன் செய்யப்பட்டு, புதிய வழிகாட்டல்களுடன் சமூகத்திற்குள் விடப்படாவிட்டால் அதன் விளைவும் மிக மோசமாகிவிடும் என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

'ஸ்பா' மையங்கள் உரிய முறைப்படி கவனித்துக் கண்காணிக்கப்படாமல் இருந்தால் அவை விபச்சார விடுதிகளாக இலகுவில் மாறிவிடும் மோச நிலைமை நீடிக்கும் என பொலிஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

இதற்கிடையில் 'ஐஸ்' என்ற போதைப் பொருளாகப் பொதுவில் அழைக்கப்படும் மெத்தம்பேட்டமைனைப் 'ஸ்பா' மையங்களில் பணியாற்றும் பெண்கள் பயன்படுத்துகின்றமையும் மேற்படி தேடுதல் வேட்டையில் கண்டறியப்பட்டிருக்கின்றது.

'ஸ்பா' மையங்கள், ஆரோக்கிய நிலையங்கள் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகள், ஒழுக்க விதிகள் போன்றவை தொடர்பில் புதிய அணுகுமுறையும் பார்வையும் மிக அத்தியாவசியமாகின்றன என்ற யதார்த்தத்தை மேற்படி நீர்கொழும்புப் பகுதியில் நடத்திய தேடுதல் நடவடிக்கை உணர்த்தி இருக்கின்றது.

இத்தகைய 'ஸ்பா' கலாச்சாரம், இங்கு உலகமயமாதல் போன்ற பரவலான நடவடிக்கைகளினால் ஏற்படும் தவிர்க்க முடியாத பாதிப்புதான்.

உலகமயமாதலின் பயனில் நல்லவற்றை அரவணைத்துக் கொண்டு, கெட்டவற்றை - சமூகச்சீரழிவைத் தருபவற்றை - கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்த நம்மை நாமே வழிபடுத்திக் கொள்ள வேண்டும்.

இல்லையேல் சீரழிவு நமக்குத்தான்.

# ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் டிரம்ப் வெற்றிபெறுவதை விரும்பாத தலைவர்கள்!

## ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவிப்பு




அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற விட்டுவிடாதீர்கள் என உலகத் தலைவர்கள் தன்னிடம் வலியுறுத்தியுள்ளனர் என்று ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நடைபெற்ற ஜி - 20 உச்சி மாநாடு உள்ளிட்ட சர்வதேச கூட்டங்களின்போது தலைவர்கள் தன்னிடம் இதைக் கூறினர் என்றுஅவர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு (2024) இறுதியில் நடைபெறவுள்ளது. இதில் ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி பைடனும், குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டிரம்ப்பும் போட்டியிடுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தேர்தலுக்கான நிதி திரட்டும் நிகழ்ச்சி நியூயோர்க் நகரில் அண்மையில் நடைபெற்றது, இதில் முன்னாள் ஜனாதிபதிகளான பராக் ஒபாமா, பில் கிளிண்டன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.


இந்த நிகழ்ச்சியில் ஜனாதிபதி பைடன் பேசிய போது, ஜனாதிபதித் தேர்தலில் தான் மீண்டும் தோற்றால் ரத்த ஆறு ஓடும் என டிரம்ப் பேசியிருக்கிறார். அவரது பேச்சு மிகவும் கவலையைத் தருகிறது.

இந்தியாவில் நடைபெற்ற ஜி - 20 உச்சி மாநாடாக இருக்கட்டும் அல்லது வேறு நாடுகளில் நடைபெற்ற சர்வதேசக் கூட்டங்களாக இருக்கட்டும், அதில் பங்கேற்ற ஒவ்வொரு தலைவரும் என்னைத் தனித்தனியாகச் சந்தித்து எனது கையைப் பிடித்துக் கொண்டு, ஜனாதிபதித் தேர்தலில் டிரம்ப் வெற்றி பெற விட்டுவிடாதீர்கள் என்று தெரிவித்துள்ளனர்.

அவர் வெற்றி பெற்றால் தங்களது ஜனநாயகத்துக்கு ஆபத்தாக இருக்கும் எனக் கருதுகிறோம் என்றும் தெரிவித்துள்ளனர். இதை மிகைப்படுத்திச் சொல்லவில்லை.-என்றார்.

# சிவப்புக் கம்பளங்களைப் பயன்படுத்த தடை ஏற்படுத்தியுள்ளது பாகிஸ்தான்!

## செலவீனங்களைக் குறைக்கும் நோக்குடன்




பாகிஸ்தான் பண நெருக்கடியில் சிக்கி தவிப்பதால், செலவீனங்களைக் குறைக்கும் நோக்கத்துடன் தேவையற்ற செலவுகளை நிறுத்துவது என்று அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி, அரச நிகழ்ச்சிகளில் சிவப்பு கம்பளங்களை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அமைச்சர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் வருகையின்போது, இவற்றை பயன்படுத்துவது இனிமேல் நிறுத்தப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்பின் உத்தரவின் கீழ் இத்தடை நடைமுறைக்கு வருமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அரச நடைமுறையின்படி வெளிநாட்டு தலைவர்கள் வருகையின்போது, சிவப்பு கம்பளங்கள் பயன்படுத்தப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையால், பணம் சேமிக்கப்படுவதுடன், பொது மக்களின் நிதி பொறுப்புடன் செலவிடப்படுவதற்கான நோக்கம் செயற்படுத்தப்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் பொருளாதார மீட்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, பிரதமர் மற்றும் அமைச்சவை உறுப்பினர்கள் தங்களுடைய சம்பளம் மற்றும் பிற பலன்களை விருப்பத்துடன் விட்டு கொடுப்பது என கடந்த வாரம், முடிவு செய்யப்பட்டது.

இதேபோன்று, பாகிஸ்தானின் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியும், தன்னுடைய சம்பளம் மற்றும் பிற பலன்களை விட்டுக் கொடுப்பதாக தீர்மானித்துள்ளார்.

# இஸ்ரேலில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை பதவி விலகுமாறு கோரி போராட்டம் முன்னெடுப்பு

இஸ்ரேலில் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராகப் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு அரசு அலுவலகங்களை முற்றுகையிட முயன்றுள்ளனர் அந்த நாட்டு மக்கள்.

நேற்று முன்தினம் (30) இந்த போராட்டமானது டெல்அவிவ், ஜெருசலேம், சிசேரியா ரானானா, ஹெர்ஸ்லியா ஆகிய நகரங்களில் இடம்பெற்றது. இதில் ஆயிரக் கணக்கானோர் சாலைகளில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காசாவில் உள்ள அனைத்துப் பிணைக் கைதிகளையும் மீட்டு கொண்டு வர கோரியும், பிரதமர் நெதன்யாகு பதவி விலக கோரியும் கோஷங்களை எழுப்பினார்கள், தவிரவும் பொதுத் தேர்தலை உடனே நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பேரணியாக சென்று, அரச அலுவலகங்களை முற்றுகையிட முயன்ற நிலையில், பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

ஜெருசலேமில், பிரதமர் நெதன்யாகு வீடு முன்பு ஏராளமானோர் திரண்டு போராட்டம் நடத்தினர். அப்போது பிணைக் கைதிகளை மீட்கத் தவறிவிட்டதாகக் குற்றம் சாட்டினர். சில இடங்களில் போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது.

வீதியில் பொருள்களைப் போட்டுத் தீ வைத்து போராட்டக்காரர்கள் கொளுத்தினர். இந்தப் போராட்டங்கள் காரணமாக இஸ்ரேலில் பரபரப்பு நிலவியது.

டெல்அவிவில் நேற்று (31) அதிகாலை போராட்டம் முடிவுக்கு வந்ததாகவும், 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கம்போடியாவில் இருந்து 250 இந்தியர்கள் மீட்பு!

கம்போடியாவுக்கு வேலை தேடிச் சென்ற 250 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளனர் என்று இந்திய வெளியுறவு துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இவர்கள், போலி வேலை வாங்கித் தருவதாக ஏமாற்றும் முகவர் மூலமாக கம்போடியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்கள் சட்ட விரோத சைபர் குற்றச் செயல்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இது குறித்துக் கம்போடியாவில் உள்ள இந்திய தூதரகத்துக்கு அங்கு மாட்டிக்கொண்ட இந்தியர்களிடம் இருந்து தொடர்ந்து முறைப்பாடுகள் அனுப்பப்பட்டுள்ளன.

இதையடுத்து கம்போடியாவில் உள்ள இந்தியர்களுக்கு மோசடி கும்பல் குறித்த தகவல் வெளியுறவுத்துறை அமைச்சகம் மற்றும் இந்திய தூதரகம் மூலம் பலமுறை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த மூன்று மாதங்களில் 75 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் அங்கு சிக்கியுள்ள ஏனைய இந்தியர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கம்போடிய அதிகாரிகளுடன் இணைந்து போலி முகவர்களைக் கண்டு பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# வளர்ந்த பாரதத்தை உருவாக்குவதே 2024 மக்களவைத் தேர்தலின் நோக்கு!

## பிரச்சாரக் கூட்டத்தில் நரேந்திர மோடி




நாடு இதுவரை வளர்ச்சியின் ஆரம்பத்தை மட்டும்தான் பார்த்துள்ளது. 2024 மக்களவைத் தேர்தல் வெறும் அரசாங்கத்தை உருவாக்குவதற்கானது இல்லை. மாறாக வளர்ந்த பாரதத்தை உருவாக்குவதற்கானது என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

உத்தரப் பிரதேசத்தில் 2024 மக்களவைத் தேர்தலுக்கான பிரச்சாரத்தை பிரதமர் நரேந்திர மோடி நேற்று (ஞாயிற்றுக் கிழமை) மீரட்டில் இருந்து தொடங்கி வைத்தார்.

மக்களவையில் அதிக இடங்களைக் கொண்ட மாநிலத்தின் வாரணாசி தொகுதியில் இருந்து பிரதமர் மோடி மூன்றாவது முறையாக போட்டியிடுகிறார். இந்த நிலையில் மீரட்டில் நடந்த தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்து கொண்டு பேசினார்

அப்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்,

எங்களது அரசு மூன்றாவது தடவை ஆட்சிப் பொறுப்பு ஏற்கத் தயாராகி வருகிறது. அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு வளர்ச்சிப் பாதைக்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. எங்களின் அடுத்த ஆட்சியின் முதல் 100 நாள்களில் எடுக்கப்பட வேண்டிய முக்கிய முடிவுகளை நாங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்கிறோம்.

கடந்த 10 ஆண்டுகளில் நாடு பார்த்தது வளர்ச்சியின் ஆரம்பத்தை மட்டுமே. இனி நாட்டை இன்னும் வேகமாக முன்னேற்றுவோம்.

2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் என்பது வெறும் அரசை உருவாக்குவதற்கானது மட்டும் இல்லை. மாறாக அது வளர்ந்த பாரதத்தை உருவாக்குவதற்கானது. வளர்ச்சிக்கான ஆதாரத்தை உருவாக்கி நாடு மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறும் போது வறுமை ஒழிக்கப் படும். நடுத்தர வர்க்கத்தினர் நாட்டுக்குப் புதிய பலத்தை வழங்குவார்கள்.

நாட்டில் இன்று நவீன உள்கட்டமைப்பு வசதிகள் பரவலாக் கப்படுகின்றன. கட்டுமான உள்கட்டமைப்பில் இந்தியா இன்று முன்னெப்போதும் இல்லாத வகையில் மூதலீட்டை உருவாக்கியுள்ளது. அனைத்து துறைகளிலும் இளைஞர்களுக்கான புதிய வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. புதிய தீர்மானங்களுடன் பெண்களுக்கான அதிகாரங்கள் முன்னேற்றமடைந்துள்ளன. இந்தியாவின் நம்பகத்தன்மை புதிய உச்சத்தை எட்டியுள்ளது. உலகம் இந்தியாவை நம்பிக் கையுடன் உற்று நோக்குகிறது.

நமது பெண்களைத் தொழில் முனைவோர்களாக உருவாக்கியுள்ளோம். அவர்கள் சொந்தத் தொழில்களைச் செய்கிறார்கள். 10 கோடி பெண்கள் சுய உதவிக் குழுக்களின் அங்கமாக உள்ளனர். 3 கோடி பெண்களை லட்சாதிபதிகளாக உருவாக்குவதே நம் கனவு. அதை நோக்கி நாங்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறோம். இது மோடியின் உத்தரவாதம்.

நாங்கள் ஊழலுக்கு எதிராகப் போராட்டத்தைத் தொடங்கினோம். அவர்கள் இண்டி கூட்டணியை உருவாக்கினார்கள், தோல்வியைக் கண்டு மோடி பயந்து விட்டதாக எண்ணிக் கொண்டார்கள். ஆனால் இந்தியா எனது குடும்பம். எனக்கு பயம் இல்லை. ஊழலில் ஈடுபட்டவர்கள் எல்லாம் இப்போது கம்பிகளுக்கு பின்னால் இருக்கிறார்கள். உச்ச நீதிமன்றத்திலும் அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை.- என்றார்.

# நாமும் ஏமாறுவோம்! பிறரையும் ஏமாற்றுவோம்!!

## இன்று ஏப்ரல் 01 முட்டாள்கள் தினம்




**நடராஜன் ஹரன்**

எல்லோருக்கும் மிகப் பிடித்தமான தினம். நம்மை நாமே கொண்டாடிக் கொள்ளும் தினம். முட்டாள்கள், முட்டாள்களை முட்டாள்கள் ஆக்கி மகிழும் தினம். இப்போது புரிந்திருக்குமே? ‘All Fools Day’ என்று அழைக்கப்படும் ஏப்ரல் 01 ஆம் திகதி பற்றித்தான் இந்தக் கட்டுரை.

எல்லோருமே ஜாலியாக சிரித்துக் கொண்டு ஒருவரையொருவர் சீண்டிகொண்டு நாம் முட்டாள்கள் தான் என்பதை ஒப்புக் கொள்ளவே இந்த தினம். இதை யாருமே தவறாக புரிந்து கொள்ளுவதோ அல்லது அடுத்தவர் நம்மை முட்டாளாக்கியவுடன் ‘விட்டேனா பார்’ என்று ஆத்திரமடைவதோ கூடாது.

அதேபோல முட்டாள் ஆக்க விரும்புவோர் அடுத்தவரது மனம் புண்படாமல் அதே சமயம் ‘ஓ! இந்தச் சின்ன விஷயத்தில் ஏமாந்து விட்டோமே என்று அவர் வாய்விட்டு சிரிக்கும்படியாக விளையாட வேண்டும். விளையாட்டு மட்டும்தான் குறிக்கோளாக இருக்க வேண்டும். எல்லை மீறாமல் இருந்தால் தொல்லைகள் இல்லை, அல்லவா?

### முட்டாள்கள் தினம் எப்படி வந்தது?

ஐரோப்பியர்கள் பல நூற்றாண்டுகளாக ஜுலியன் நாள்காட்டியைத்தான் பயன்படுத்தி வந்தனர். 18 ஆம் நூற்றாண்டின் நடுவில் கிரிகோரியன் நாட்காட்டி புழக்கத்தில் வந்தது. பழைய நாள்காட்டியின்படி ஏப்ரல் மாதத்தில்தான் புது வருடம் ஆரம்பம். ஆனால் புதிய நாள்காட்டியில் ஜனவரியிலிருந்து புது வருடம் கணக்கிடப்பட்டது. இந்த மாற்றம் பல குழப்பங்களை உண்டு பண்ணியது. யாரெல்லாம் பழைய பஞ்சாங்கமாக இருந்தார்களோ அவர்கள் ‘முட்டாள்கள்’ என்று முத்திரை குத்தப்பட்டார்கள். காலப்போக்கில் இந்த தினம் மற்றவர்களை விளையாட்டாக, வேடிக்கையாக முட்டாள் ஆக்கும் தினமாக மாறி இன்றுவரை நிலைத்துவிட்டது.

இன்னொரு கதையும் வழக்கில் இருக்கிறது. ரோமானிய அரசன் கான்ஸ்டன்டைன் என்பவனது ஆட்சி பலத்த சர்ச்சைக்கு உள்ளானபோது, அவன் தனது அரசவை கோமாளி கூகல் என்பவனையும், தனது பழங்குடியினரையும் ஒரு நாள் நாட்டை ஆளச் சொன்னானாம். கோமாளிகள் உண்மையில் மிகுந்த புத்திசாலிகள் வாக்கு சாமர்த்தியத்துடன் கூடிய வேடிக்கை பேச்சுக்கள் பேசுவதில் சமர்த்தர்கள். ஆனாலும் அவர்களை அந்தக் காலத்தில் முட்டாள்கள் என்று அழைப்பது வழக்கமாக இருந்தது. கோமாளிகள் ஆட்சி செய்த அந்த ஒருநாள் தான் ‘All Fools Day’. அப்போதிலிருந்து இந்த ஏப்ரல் முதலாம் ‘முட்டாள்கள்’ தினமாக உலகெங்கிலும் மிகப் பெரிய உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

ஏப்ரல் 1 – ஏமாற்றுவதையும் ஏமாறுவதையும் சிரித்துக் கொண்டே ஏற்றுக்கொள்ளும் ஒரு தினம். சுருக்கமாகச் சொன்னால் முட்டாள்கள் தினம்.

உலகம் முழுவதும் பலரைக் குழந்தை பருவத்துக்கு அழைத்துச் செல்லும் இன்றைய தினம், எப்படி உருவானது?

அதன் வரலாற்றுப் பின்னணியில் பல கதைகள் உண்டு. அவற்றுள் ஒன்றுதான் இது. 1500களில் ஐரோப்பியர்கள் கடைப்பிடித்த ஒரு பழக்கமாக ஏப்ரல் 1 கூறப்படுகிறது காலப்போக்கில் மனிதர்களை ஏமாற்றும் தினமாக அது மாற்றம் கண்டதாம். இது போன்று பல கதைகள் பரவிவருகின்றன.

சர்வதேச ரீதியில் அன்னையர் தினம், தந்தையர் தினம், காதலர் தினம், மகளிர் தினம், தொழிலாளர்கள் தினம் என்று மக்களுக்குப் பலவிதமான தினங்கள் இருப்பது போலவே முட்டாள்களுக்கும் என்று ஒரு தினம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய தினங்களுக்கு உரிமை கொண்டாடுவதைப் போல இத்தினத்தில் தமக்கும் பங்கிருப்பதாகச் சொல்லிக் கொள்ள எவரும் முன்வருவதில்லை.

அதே நேரம் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளாமல் அடுத்தவரை முட்டாளாக்க முனையும் முட்டாள்களான ‘அறிவாளிகளின் தினம்’ என்று இன்றைய தினத்தைக் கூறினாலும் பிழையாகாது. அதுதான் இந்த ஏப்ரல் முதல் திகதியாகும். விஷயங்களை அறிந்து கொள்பவன் அறிஞன் ஆகின்றான் என்பார்கள். அதேபோல் ஒரு முட்டாள் எனப்படுகிறவன் ‘தான் ஒரு முட்டாள்’ என்பதை அறிந்து கொள்ளும்போது அவனும் ஒரு ‘அறிஞனாக’ வாய்ப்புக் கிட்டுகிறதா என்று சிந்திக்கத் தோன்றுகிறது.

‘கற்றாரைக் கற்றாரே காமுறுவது’ போல் ஒரு முட்டாள் அவனை விடப் பெரிய முட்டாளை மெச்சுவான் என்று யாரோ ஒருவர் கூறியுள்ளதாக அறிகிறோம். ‘முட்டாள்கள் தினம் ஏப்ரல் முதலாம் திகதி உலகமெல்லாம் முட்டாள்களாக்கும் முயற்சி நடைபெறுகிற ஒரு முட்டாள் நாள். இது எவ்வாறு ஆரம்பமானது என்ற வினாவும் எம்முள் எழுகின்றது.

புராதன வரலாற்றில் ரோமானிய நாட்காட்டியின்படி ஏப்ரல் முதலாம் திகதி தான் வசந்தம் ஆரம்பிக்கும் பொன்னாளாகும். புராதன வரலாற்றில் புத்தாண்டுக் கொண்டாட்டங்களை மிகுந்த உற்சாகத்தோடு கொண்டாடியதற்கான வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன.

ஹார்வி என்னும் வரலாற்றாய்வாளர் தனது குறிப்பில், பிரான்ஸ் தேசத்தின் அரசன் ஒன்பதாம் சார்ள்ஸ் காலத்தில் மார்ச் மாதம் 25ம் திகதியிலிருந்து ஒரு வார காலப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டதாக குறிப்பிடுகிறார். திருவிழாவைப்போல் நடைபெறும் இந்தக் கொண்டாட்டங்களின்போது ஒருவருக்கொருவர் பரிசுப் பொருள்களையும், அன்பளிப்புகளையும் வழங்கி தங்கள் அன்பை வெளிப்படுத்திக் கொண்டதாகக் குறிப்பிடுகிறார். இந்த ஒரு வாரக் கொண்டாட்டத்தின் இறுதி நாளான ஏப்ரல் முதலாம் திகதி பெருவிருந்துடன் புத்தாண்டு விழா நிறைவெய்தியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

1562 ஆம் ஆண்டளவில் அப்போதைய போப்பாண்டவரான 13 ஆவது கிரகரி, பழைய ஜுலியன் ஆண்டுக் கணிப்பு முறையை ஒதுக்கிப் புதிய கிரேகோரியன்

12

# நாமும் ஏமாறுவோம்! பிறரையும் ஏமாற்றுவோம்!!

## இன்று ஏப்ரல் 01 முட்டாள்கள் தினம்




(11ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண்டுக் கணிப்பு முறையை நடைமுறைப்படுத்தினார். இதன்படி ஜனவரி 1 அன்றுதான் புத்தாண்டு ஆரம்பமாகின்றது. 1562 ஆம் ஆண்டில் போப் கிரகோரி புதிய ஆண்டுத் தொடக்கத்தைநடைமுறைப்படுத்தும்படிஅறிவித்தார்.ஆண்டுத்தொடக்க நாளாக ஜனவரி 1 ஆம் திகதியை அறிமுகம் செய்து வைத்தார்.

இனிமேல் பிரான்ஸ் தேசம் முழுமையும் இந்த நாள்காட்டிதான் என்று ஊர் தோறும் அறிவிக்கப்பட்டது. இந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அல்லது போப்பின் அறிவிப்பை நம்பாதவர்கள் ஏப்ரல் 1 ஆம் திகதியையே புத்தாண்டுப் பிறப்பாகக் கொண்டாடினர். இந்தப் புதிய புத்தாண்டு தினத்தை ஐரோப்பிய தேசங்களும், அவற்றின் மக்களும் உடனேயே ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குச் சில காலம் எடுத்தது. அதற்குக் காரணங்கள் பல உண்டு.

அன்றைய காலகட்டத்தில் இது போன்ற செய்திகள் அல்லது மாற்றங்கள் சகலரையும் சென்றடைவதற்கு உரிய தகுந்த சாதனங்கள் இருக்கவில்லை. அத்தோடு பழைய வழக்கத்தைப் புறம் தள்ளி புதிய வழக்கத்தை ஏற்றுக் கொள்வதையும் இந்த மக்கள் மறுத்திருக்கலாம்.

ஆகவே இந்த மக்கள் தொடர்ந்தும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதியையே தமது புத்தாண்டுத் தினமாகக் கொண்டாடி வந்தார்கள். எவ்வாறாயினும் பிரான்ஸ் 1852 ஆம் ஆண்டிலும் ஸ்காட்லாந்து 1660ம் ஆண்டிலும், ஜெர்மனி, டென்மார்க்,நோர்வே போன்ற நாடுகள் 1700 ம் ஆண்டிலும், இங்கிலாந்து 1752 ம் ஆண்டிலும், இந்தப் புதிய புத்தாண்டு தினத்தை உத்தியோக பூர்வமாக ஏற்றுக் கொண்டன.

புதிய வழக்கத்தை ஏற்றுக் கொண்டு ஜனவரி முதலாம் திகதியைப் புத்தாண்டாகக் கொண்டாடத் தொடங்கிய மக்கள் இந்த பழைய வழக்கத்தைப் பேணி ஏப்ரல் மாதம் முதல் திகதியில் புத்தாண்டைக் கொண்டாடுபவர்களை ஏப்ரல் முட்டாள்கள் என்று இவர்கள் அழைத்தார்கள். இதிலிருந்து ஏப்ரல் முட்டாள்கள் தினம் ஆரம்பமாயிற்று என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது.

என்றாலும் 1582 ஆம் ஆண்டுக்கு முன்னரேயே 1508 ஆம் ஆண்டில் பிரான்ஸ் தேசத்தில் முட்டாள்கள் தினம் கொண்டாடப்பட்டு வந்துள்ளது என்பதற்கு சான்றுகள் உண்டு. அதே போல் டச்சு மொழியிலும் 1539 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் முட்டாள்கள் தினம் பற்றிச் சொல்லப்பட்டிருப்பதை அறியக் கூடியதாக உள்ளது.

1466 ஆம் ஆண்டு மன்னன் பிலிப்பை அவரது அரச சபை விகடகவி, பந்தயம் ஒன்றில் வென்று மன்னனையே முட்டாளாக்கிய நாள் ஏப்ரல் முதலாம் தினம் என்றும் கூறப்படுகிறது. ரோமாபுரியில் கிறிஸ்தவர்கள் அதிகாரத்திற்கு வந்த போது, நடைமுறைகளை மாற்றினார்கள். தற்போதுள்ள ஈஸ்டர் பண்டிகையினையும் மாற்றி அறிவித்தார்கள். பழமையான கொண்டாட்டங்களை மாற்றியதோடு அவற்றில் ஒரு சிலவற்றை வேடிக்கை, வினோத கொண்டாட்டங்களுக்கு உரிய நாளாக மாற்றினர்.

இந்த மாற்றங்களில் நம்பிக்கை இல்லாமலிருந்த இவர்களைக் கேலியும் கிண்டலும் செய்து விளையாட்டாக முட்டாளாக்கி ஏமாற்றும் போக்கில் ஈடுபட்டனர். இதுவே நாம் இன்றைக்கு வேடிக்கையாய் முட்டாள்களாக்கி மகிழ்கிற நாளாகத் தொடர்ந்திடுகிறது எனலாம். ஜனவரி மாதம் முதலாம் திகதியைப் புத்தாண்டாக ஏற்றுக் கொள்ள மறுத்தவர்கள் அல்லது மறந்தவர்களுக்கு முட்டாள் தனமான பரிசுகளை அனுப்பினர். பெரிய பரிசுக் கூடைகள் போன்று வடிவமைத்து உள்ளே குதிரை முடி, பழைய குப்பை என்று நிரப்பிக் கொடுத்து ஏமாற்றுதல் போன்ற ஏமாற்று வேலைகளைச் செய்து ஏமாற வைத்தனர். இதை நம்பும்படியான ஆனால் நகைக்கும்படியான செயலாக செய்து மகிழ்ந்தனர்.

நெப்போலியன் ஆஸ்திரியாவைச் சேர்ந்த மேரி லூயிசை 1810 இல் திருமணம் செய்து கொண்டார். அந்த மாதம், நாள் ஏப்ரல் 1 என்பதால் மணமகளை கேலி செய்து இருக்கின்றனர். நெப்போலியன் உண்மையாகத் திருமணம் செய்யவில்லை. உன்னை முட்டாளாக்கவே திருமணம் செய்திருக்கிறார் என்று எள்ளி நகையாடியதாகக் கூறப்படுகிறது.

இத்தகைய கேலிக் கூத்துக்கள் சுற்றிச் சுழன்று பிரான்சிலிருந்து இங்கிலாந்துக்கும் அங்கிருந்து அமெரிக்காவுக்கும் 'ஏப்ரல் பூல்' விரிந்து பரவி இருக்கிறது. இது குறித்து சிக்காகோவில் உள்ள இலினாய்ஸ் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் ஸ்டீவன் பேன்னிங் ஐரோப்பாவில் எப்படி எல்லாம் நடந்தது என்று விலாவாரியாகக் குறிப்பிட்டுள்ளார்.

கிரகோரியன் கலண்டரை ஏற்றுக் கொண்ட முதல் நாடாக பிரான்ஸ் இருந்தாலும் இத்தகைய கேளிக்கைகளின் ஆணிவேரைக் கண்டுபிடிக்கப் போதுமான ஆதாரக் குறிப்புகள் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். ஸ்கொட்லாந்தில் அதாவது ஏப்ரல் முதலாம் திகதி வினோதமாக உடையுடுத்தி இரண்டும் கெட்டானாக நடந்து கொண்டு மக்கள் அந்த நாளை நகர்த்தியதாக மேலும் தெரிவிக்கிறார்.

பிரெஞ்சுக் குழந்தைகள்கூட காகிதத்தில் மீன் போன்று செய்து தனது சினேகிதர்களின் முதுகில் ஒட்டி அனுப்பிக் கேலி செய்திருக்கின்றனர். இப்படி முதுகில் மீனோடு திரியும் குழந்தைகளைப் பார்க்கும் குழந்தைகள் 'ஏப்ரல் மீன்' என்று அழைத்துக் கேலி செய்திருந்திருக்கின்றனர்.

1986 இல் ப்ரெட் வால்டன் இயக்கிய, 'ஏப்ரல் பூல்ஸ் டே' திரைப்படம் மிகப் பிரபலமானது. டெபோரா போர்மேன், ஜெய் பேக்கர், டெபோரா குட்ரிச் நடித்திருந்தனர். பாரமவுண்ட் பிக்சர்ஸ் நிறுவனத்தார் பிரம்மாண்டமாகத் தயாரித்திருந்த இப்படம் ஒளி நாடாக்களிலும் வீர நடை போட்டு வந்ததை குறிப்பாகச் சொல்லலாம். ஏப்ரல் முதல் திகதி பல வேடிக்கைகள் மட்டுமல்லாது பல வினைகளும் வந்துள்ளன.

எது எப்படி இருப்பினும் நாமும் ஏமாறுவோம்! பிறரையும் ஏமாற்றுவோம்!! சந்தோசமாக இருப்போம்!!!










# 25அடி உயரமான சுவாமி விவேகானந்தரின் சிலை மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் திறந்துவைப்பு

**(கனகராசா சரவணன்,பழுவூரான்)**

மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷனின் நூற்றாண்டின் தொடக்க விழாவைச் சிறப்பிக்கும் முகமாக கல்லடிப் பாலத்தடிப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 25 அடி உயரமான சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலையை நேற்று ஞாயிற்றுக்கிழமை இராமகிருஷ்ணமிஷன் இலங்கைக் கிளையின் தலைவர் ஶ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜீ மஹறாஜ் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து சுவாமிஜீயினால் ஆரார்த்தி காட்டப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவட்ட பொது முகாமையாளர் ஶ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக இராமகிருஷ்ணமிஷனின் இலங்கைக் கிளையின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜீ மஹறாஜ், அதிதிகளாக நாடாளுமன்ற உறுப்பினர்களான கே. கருணாகரம், இரா.சாணக்கியன் மற்றும் முன்னாள் மாவட்ட அரசாங்க அதிபர்களான கே.கருணாகரன், திருமதி கலாமதி பத்மராஜா மற்றும் கே.விமலநாதன், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார், கணபதிப்பிள்ளை பாஸ்கரன், மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் விநாயகமூர்த்தி றஞ்சிதமூர்த்தி, மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷனின் உதவி முகாமையாளர் சுவாமி சுரார்ச்சிதானந்தஜீ மஹறாஜ், மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தினர், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், கலை இலக்கிய வாதிகள், ஆன்மீகத் துறவிகள், பெற்றோர்கள், இல்ல மாணவர்கள் மற்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகள்,மாவட்டத்தில் உள்ள திணைக்கள உயர் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து

தொடர்ச்சி▼







# 25அடி உயரமான சுவாமி விவேகானந்தரின் சிலை மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் திறந்துவைப்பு

தொடர்ச்சி▲

கொண்டு சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

இதன்போது சுவாமி விவேகானந்தரின் வேடம் தாங்கிய சிவானந்தா வித்தியாலய மாணவரொருவர் உரைநிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் வாவிக்கரை வீதி–02 பிரதேசத்தில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷனுக்குச் சொந்தமான காணியில் இளைய சமுதாயத்தினரின் தொழில் கல்வி மேம்பாட்டுக்காக சுவாமி விவேகானந்த கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு சனிக்கிழமை காலை சிறப்பாக இடம்பெற்றது.

இதன்போது முதல் அடிக்கல்லை அகில உலக இராமகிருஷ்ணமிஷன் பொதுச் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி போதசாரானந்தஜி மகராஜ் நட்டு வைத்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாகவும், அகில உலக இராமகிருஷ்ணமிஷன் துணைப் பொதுச் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி போதசாரானந்தஜி மகராஜ் முதன்மை அதிதியாகவும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரன், மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜெஸ்டீனா முரளிதரன், பிரதேச செயலாளர் வீ. வாசுதேவன் ஆகியோர் அழைப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.



இவ்வைபவத்தில் முன்னாள் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் மற்றும் மாவட்டத்தில் உள்ள அரச திணைக்கள உயர் அதிகாரிகள், வைத்திய அதிகாரிகள், பொதுமக்கள், நலன் விரும்பிகள், இந்து ஆலய நிர்வாக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

மட்டக்களப்பு கல்லடி உப்போடை இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தென்னிந்திய வேலூர் மாவட்ட அகில உலக இராமகிருஷ்ண மிஷன் பொதுச் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி போதசாரானந்தஜி மகராஜ் அவர்களால் மட்டக்களப்பு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன், மாநகரசபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் மற்றும் மாவட்டத்தில் உள்ள அரச திணைக்கள உயர் அதிகாரிகள், வைத்திய அதிகாரிகள் இந்து ஆலய நிர்வாகத் தலைவர்கள் ஆகியோருக்கு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது .









# சிவனொளிபாத மலைக்குச் சென்ற அறுவர் பல்வேறு போதைப் பொருள்களுடன் கைது

(செ.தி.பெருமாள்)

பல்வேறு போதைப் பொருள்களுடன் சிவனொளிபாத மலைக்கு வழிபட வந்த ஆறு இளைஞர்கள் வட்டவளை மற்றும் நல்லதண்ணி பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 30ஆம் திகதி 'யுக்திய' நடவடிக்கையுடன் இணைந்து மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில், இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த வட்டவளை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், கடந்த 30 ஆம் திகதி, யுக்திய நடவடிக்கையுடன் இணைந்து சிவனொளிபாத மலைக்கு யாத்திரிகர்கள் செல்லும் வாகன சோதனையின் போது,



பல்வேறு போதைப் பொருள்களைக் கொண்டு சென்ற நான்கு இளைஞர்கள் வட்டவளை பகுதியில் நடத்தப்பட்ட வீதி தடைச் சோதனையின் போது கைது செய்யப்பட்டனர் என்று தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த நல்லதண்ணி பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், கஞ்சா மற்றும் போதைப் பொருளை எடுத்துச் சென்ற இரு இளைஞர்கள் நல்லதண்ணி பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றார்.

அத்துடன், கடந்த 29ஆம் திகதி இரத்தினபுரி சிவனொளிபாத மலைக்குச் செல்லும் வீதியில் பாதுகாப்பு வேலியில் இருந்து தவறி விழுந்து சிகிச்சைக்காக மஸ்கெலியா பிராந்திய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட இந்திய பிரஜை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளார் என நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர தெரிவித்தார்.

# களவாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட அறுவர் குயில்வத்தைப் பகுதியில் சிக்கினர்

(செ.தி.பெருமாள்)

மகாவலி ஆற்றுக்கு நீர் வழங்கும் ஹட்டன் ஓயாவை அழித்து, குயில்வத்தைப் பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஆறு பேர் நேற்று முன்தினம் 30 திகதி இரவு ஹட்டன் பிரதேச ஊழல் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

ஹட்டன் பிரதேச ஊழல் ஒழிப்பு பிரிவின் மேற்பார்வையின் கீழ் செயற்படும் ஹட்டன் பொலிஸ் அத்தியட்சகர் நிபுன தெஹிகமவிற்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், நீர் தெளிக்கும் இயந்திரம் மற்றும் இரத்தினக்கற்கள் எடுப்பதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களுடன் இந்த ஆறு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் ஹட்டன் பிரதேச ஊழல் ஒழிப்புப் பிரிவின் அதிகாரி ஒருவரிடம் வினவிய போது, குயில்வத்தை பிரதேசத்தில் சிலர் ஹட்டன் ஓயாவை அழித்து சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டுள்ளனர் எனக் கிடைத்த தகவலையடுத்து, ஹட்டன் பொலிஸ் அத்தியட்சகர் நிபுன தெஹிகமவின் ஆலோசனையின் பேரில், மஹாவலி ஆற்றுக்கு நீர் வழங்கும் பிரதான நீர் வழிப்பாதை, சுற்றிவளைப்பின் போது இந்தக் குழுவினர் கைது செய்யப்பட்டனர் என்றார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை ஹட்டன் மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# 2,535 ஆசிரியர் உதவியாளர்கள் தெரிவு!

## வர்த்தமானி அறிவித்தல் மேயில் என்கிறார் கல்வி அமைச்சர்

தோட்டப் பாடசாலைகளுக்கு 2,535 ஆசிரியர் உதவியாளர்களை ஆள்சேர்ப்புச் செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் மே மாதம் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவர்களை இணைத்து அடிப்படை பயிற்சிகளை அளித்து பாடசாலைகளுக்கு அனுப்ப எதிர்பார்க்கப்படுகிறது என்றார் அவர்.

தோட்டப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை ஆள்சேர்ப்புச் செய்வதற்குத் தகுதியானோருக்குப் பற்றாக்குறை நிலவுவதால் தோட்டப் பாடசாலைகளில் இன்னமும் பாரிய ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

கல்விக் கல்லூரிகளில் கூட, தகுதியான மாணவர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். பட்டதாரிகள் ஒரு சிலரே இருப்பதால், தோட்டப் பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவது கடினமாக உள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.



அதற்கு தீர்வாக ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் தற்போதுள்ள பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட மாகாண அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஆசிரியர் சேவைகள் சட்டத்தின் கீழ் மேலும் 500 ஆசிரியர் உதவியாளர்களை ஆள்சேர்ப்புச் செய்யக் கல்வி அமைச்சுக்கு பொதுச் சேவை ஆணைக் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இவ்வாறு ஆள்சேர்ப்புச் செய்யப்படுபவர்கள் ஆசிரியர் நிலையங்கள் மூலம் மூன்று வருடங்களுக்குள் டிப்ளோமா தரம் வரை பயிற்றுவிக்கப்பட்டு பாடசாலைகளுக்கு அனுப்பப்படுவார்கள் என்றும் அமைச்சர் கூறினார்.





# மட்டிக்களி திரௌபதையம்மன் ஆலயத்தில் தீ மிதிப்பு நிகழ்வு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மட்டிக்களி திரௌப தையம்மன் ஆலயத் தீமிதிப்பு வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு பக்த அடியார்களின் அரோகரா கோசங்களுக்கு மத்தியில் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

திரௌபதையம்மன் ஆலயத் தீ மிதிப்பு திருவிழாவில் பல ஆயிரக˙கணக்கான பக்த அடியார்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இவ்வாலய உற்சவம் கடந்த 22 ஆம் திகதி வெள் ளிக்கிழமை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி, நேற்று முன்தினம் சனிக்கிழமை கும்பம் சொரி யும் நிகழ்வுடன் திருச்சடங்கு நிறைவு பெற்றது.











# ஒரு கோடியே எழுபது லட்சம் வாக்காளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி




2024 ஜனாதிபதித் தேர்தலில் சுமார் ஒரு கோடியே எழுபது லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கப் பதிவு செய்திருக்கின்றனர் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தத் தொகையில் 18 வயதை பூர்த்திசெய்த 10 லட்சம் புதிய வாக்காளர்கள் உள்ளடங்குகின்றனர் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான அடிப்படை ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளன. ஜனாதிபதி தேர்தலுக்கு ஆயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தேவை ஏற்படின் கூடுதல் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஜனாதிபதி தேர்தலுக்கு தேவையான எழுதுபொருட்கள் மற்றும் ஏனைய பொருப்களைக் கொள்வனவு செய்வதற்கும் ஆணைக்குழு செயற்பட்டு வருவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

இவ்வாண்டு இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று அவர் மேலும் வலியுறுத்தினார்.




# அதிக மது அருந்தும் போட்டியில் வென்றவரை அரவணைத்த காலன்

அதிக மது அருந்துபவரைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்பட்ட போட்டியின் போது அதிக மது அருந்திய மூன்று பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளார்.

ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லெடண்டி தோட்டத்தின் மார்ல்ப்ரோ பிரிவில் வசிக்கும் கணேசன் ராமச்சந்திரன் என்ற 39 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 27 ஆனம் திகதி எஸ்டேட்டில் உள்ள இந்து கோவிலில் வருடாந்த தேர் திருவிழா இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட இளைஞர்கள் குழுவினர் அதிகளவு மது அருந்துபவர்களைத் தெரிவு செய்யும் போட்டியை நடத்தினர்.

ஒரே தோட்டத்தில் வசிக்கும் மூன்று பேர் கலந்து கொண்ட இப்போட்டியில், மூன்று 750 மில்லி மதுப் போத்தல்கள் வழங்கப்பட்டு, குறைந்த நேரத்தில் குடிப்பவரை வெற்றியாளராக தேர்வு செய்ய திட்டமிடப்பட்டது.

போட்டியில் கலந்து கொள்வதற்கு முன்னரும் தாங்கள் அதிகமாக மது அருந்தியிருந்தனர் என அந்தத் தோட்டத்தின் தோட்ட தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான உயிரிழந்தவரின் மூத்த மகள், இரவு வீட்டுக்கு வந்த தனது தந்தை இரவு உணவு சாப்பிட்டுவிட்டு அதிகாலை தூக்கத்திலேயே உயிரிழந்தார் என மரண விசாரணையில் தெரிவித்துள்ளார்.

இந்த போட்டியில் கலந்துகொண்ட மற்றுமொருவர் மிகவும் சுகவீனமடைந்த நிலையில் திக் ஓயா ஆரம்ப வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.




# தமிழரசு ஆதரவின்றி ஜனாதிபதியாக எவரும் வரமுடியாது என்ற நிலைதான் எமது இலக்கு

## மட்டக்களப்பில் தந்தை செல்வா ஜயந்தி அஞ்சலியில் சாணக்கியன் உரை

(கனகராசா சரவணன்)

இந்த வருடம் இரண்டு தேர்தல்கள் வருவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இதில் எந்தத் தேர்தல் முதலில் வரும் என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு மட்டுமே தெரியும். ஆனாலும் அடுத்த ஜனாதிபதியாக வர நினைக்கின்ற எவருமே தமிழரசுக் கட்சியின் ஆதரவு இன்றி ஜனாதிபதியாக வரமுடியாதளவிற்கு தமிழரசு கட்சியைப் பலப்படுத்திக் கொள்வதுதான் எங்களுக்கு தற்போது இருக்கும் பொறுப்பு என நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்

தந்தை செல்வாவின் 126 ஜனன தினத்தையிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு மட்டக்களப்பில தந்தை செல்வா பூங்காவில் இடம்பெற்றது. இதன்போது அவரது திருஉருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி, விளக்கேற்றி, அஞ்சலி செலுத்திய பின்னர் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் முதலாவது மாநாட்டில், எந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் எங்கள் மக்களையும் மண்ணையும் பாதுகாக்கும் வகையில் செயற்படவேண்டும், எங்கள் மக்களுக்கும் மண்ணுக்கும் எதிரான விடயத்தைச் செய்யக்கூடாது, இதைப் பாதுகாப்பதுதான் கட்சியின் பிரதானமான பொறுப்பு எனத் தந்தை செல்வா சொன்னார். அன்று தொடக்கம் இன்று வரைக்கும் 75 வருடங்களுக்கு மேலாக இந்த மக்களுக்காக அரசியல் ரீதியாக தொடர்ச்சியாக குரல் கொடுத்துவரும் ஒரே கட்சி தமிழரசுக் கட்சி மட்டும் தான்.

இன்று தமிழ்த் தேசிய அரசியலிலே கொலை, கற்பழிப்பில் ஈடுபட்ட கட்சிகளும் தாங்களும் தமிழ்த் தேசியக் கட்சிகளாகக் காட்டிக்கொள்ள முயற்சித்திருந்தாலும் கூட, இதில் போலியும் நல்லதும் இருக்கின்றன. அவ்வாறு தமிழ்த் தேசியப் பரப்பில் போலி கட்சிகளும் இருக்கின்றன. ஆனால் தமிழரசுக் கட்சிதான் நல்ல கட்சி என்பது அனைவருக்கும் தெரியும்.

இந்த வருடம் இரண்டு தேர்தல்கள் வரும். இருந்தபோதும் இலங்கை சட்டத்தின்படியும் அரசமைப்பின்படியுன் முதலில் ஜனாதிபதி தேர்தல்தான் வரவேண்டும். அதேவேளை இலங்கையில் நடக்கும் ஒரே ஒரு தேர்தல் மட்டும்தான் தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைத்துச் செய்யக் கூடியது. அது ஜனாதிபதி தேர்தல்தான். எதிர்வரும் 6 ஆம் மாதத்தின் பிற்பாடு ஜனாதிபதி தேர்தல் பொறுப்புக்கள் அனைத்தும் தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

உள்ளூராட்சி, மாகாணசபைத் தேர்தல்களைப் பிற்போட்டமை போல ஜனாதிபதித் தேர்தலையும் பிற்போட முயற்சி எடுக்கப்படலாம்.

ஜனாதிபதித் தேர்தல் தான் முதலில் வரவேண்டும். ஆனால் ஜனாதிபதி ரணிலுக்கு தேர்தலில் தான் வெல்லக் கூடிய சூழ்நிலை இல்லாமல் போய்விடும், தனக்கு ஜனாதிபதியாக வரமுடியாத ஒரு சூழல் அமையலாம் என ஒரு சிந்தனை வந்தால் அரசமைப்பின்படி இப்போது எச்சமயத்தில் வேண்டும் என்றாலும் அவர் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடலாம்.

எனவே இந்த இரண்டு தேர்தல்களும் இந்தவருடம் வருவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இதில் எது முதலில் வரும் என்பது ரணில் விக்கிரமசிங்கவிற்கு மட்டுமே தெரியும்.

எனவே இந்த நேரத்தில் தமிழரசு கட்சிக்கு என்ன பொறுப்பு இருக்கின்றது? 1977 க்கு முதல் தொகுதிவாரியாக நடந்த 1960 ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஜூலையில் நடைபெற்ற இரண்டு தேர்தல்களில் மார்ச்சில் நடந்த தேர்தலில் டட்லி சேனநாயக்காவின் ஆட்சியிலே தமிழ் மக்களுக்கு எதிரான சில தீர்மானங்கள் வருவதன் காரணமாக, அந்த ஆட்சி மாற்றம் உருவாகுவதற்கு தமிழரசு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் காரணம். அப்போது தமிழர்களுக்குப் பாதகமான நிலைவரும் போது ஆட்சி மாற்றம் செய்யக் கூடிய அதிகாரம் நம்மிடம் இருந்தது.

அதனை தொடர்ந்து 1960 ஜுலையில் இடம்பெற்ற தேர்தலில் சிறிமா பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்தார். அதனைத் தொடர்ந்து 1965 இடம்பெற்ற தேர்தலில் தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன்தான் அந்த ஆட்சி அமைக்கப்பட்டது. அதில் செனட்டராக திருச்செல்வம் இருந்தார்.

1970 ஆம் ஆண்டு தேர்தலில் சிறிமாவே பண்டாரநாயக்கா தமிழ்ப் பிரதிநிதிகள் இல்லாமல் ஆட்சி அமைக்கலாம் என ஆட்சி அமைத்தபோது தான் தந்தை செல்வா தமிழ் மக்களை கடவுள்தான் காப்பற்ற வேண்டும் என்றார். இந்த விடயங்களை வைத்துப் பார்க்கும் போது 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அமைய தமிழ் மக்களின் தேவை இருந்தது. எனவே இந்தத் தேர்தல் வரும் நிலையில் தமிழரசுகட்சி வாக்குகளை எடுப்பதன் மூலம் 1960 ஆம் ஆண்டு எவ்வாறு நாங்கள் நினைத்தால் ஆட்சி மாற்றத்தை கொண்டுவரமுடியும் என்ற சூழல்

தொடர்ச்சி▼



# தமிழரசு ஆதரவின்றி ஜனாதிபதியாக எவரும் வரமுடியாது என்ற நிலைதான் எமது இலக்கு

தொடர்ச்சி▲

இருந்ததோ, அதேபோல மீண்டும் ஓர் ஆட்சி அதிகாரத்தைக் கூட மாற்றக் கூடியளவிற்கு எங்களை நாங்கள் பலப்படுத்திக் கொள்ள வேண்டும்.

2020 இல் கோட்டா பகிரங்கமாக நான் சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி எனச் சொன்னார். கடைசியில் அவரே அகதியாக ஓடவேண்டிய சூழல் ஏற்பட்டது. அதேவேளை இதே ஒரு நாளில் ஈஸ்ரர் குண்டுவெடிப்பு இடம்பெற்றது. இந்த குண்டுவெடிப்புடன் இங்கு அபிவிருத்திக்குழுத் தலைவராகவும் இராஜாங்க அமைச்சராகவும் இருக்கின்ற சிவநேரதுரை சந்திரகாந்தன் சம்பந்தப்பட்டதான குற்றச்சாட்டுக்கள் 'சனல்4' இனால் முன்வைக்கப்படுகின்றது.



இவ்வாறு மட்டக்களப்பில் மண்ணையும் மக்களையும் அழிக்கின்ற கட்சிக்கு – இவர்களுக்கு – 2020 இல் மாவட்ட மக்கள் சில பொறுப்புக்களை வழங்கியுள்ளனர். உண்மை நிலையை மக்கள் உணர வேண்டும்.

எனவே நாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில், எதிர்வரும் காலங்களில், வாக்கு வங்கியை எவ்வாறு அதிகரிப்பது என்று சிந்திக்க வேண்டும். எங்களுடைய ஆதரவு இல்லை என்றால் அடுத்த முறை ஜனாதிபதியாக வர நினைக்கின்ற எவருமே ஜனாதிபதியாக வரமுடியாதளவிற்கு தமிழரசுக்வ்கட்சியை பலப்படுத்திக் கொள்வதுதான் எங்களுக்கு தற்போது இருக்கும் பொறுப்பு. –என்றார்.





# ஊடக தூது மடலின் இரண்டாவது வெளியீட்டு விழாவில் வடமராட்சி மூத்த ஊடகவியலாளர் தில்லைக்கு விருது!

ஊடகத் தூது மடல் இரண்டாவது வெளியீட்டு விழாவும், 'ஊடகவியல் கற்போம் – தமிழ் கத்தோலிக்கச் செய்தி' லங்கா இணைய யூரியூப் தள திறப்பு விழாவும் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. யாழ். கொழும் புத்துறை பீச் றோட்டில் அமைந்துள்ள பிசப் சவுந்தரம் மீடியா சென்றரில் ஊடகத் தூது மடலின் பிரதம ஆசிரியர் கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஊடகத் தூது விருது வழங்கலும் இடம்பெற்றது. இதன் போது ஊடகத் துறையில் ஐம்பது ஆண்டுகளுக்கு அதிகமாக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் வடமராட்சி மூத்த ஊடகவியலாளர் சின்னத்துரை தில்லைநாதனுக்கு ஊடகத் தூது மடலின் 2024 ஆம் ஆண்டுக்கான ஊடகத் தூது விருது வழங்கப்பட்டது.














# கொட்டக்கலையில் விமரிசையாக குருகுலம் பத்தாவது ஆண்டு விழா

(ஆ.ரமேஸ்)

அகில இலங்கை ஐக்கிய இந்து குருமார் சங்கம் மற்றும் ஸ்ரீ வித்யா வேத பாடசாலை (குருகுலம்) பத்தாவது ஆண்டு விழா கொட்டக்கலை ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் நேற்றுக் காலை முதல் இடம்பெற்றது.

அகில இலங்கை ஐக்கிய இந்து குருமார் சங்க தலைவர் சாகித்திய சிரோமனி சிவஸ்ரீ ச.ஸ்கந்தராஜ குருக்கள் தலைமையில் இந்த நிகழ்வு வெகு விமர்சையாக இடம்பெற்றது.

விழாவில் நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் ஜீவன் தொண்டமான், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் கலந்துக்கொண்டனர்.

அத்துடன் நாட்டில் வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட பல பாகங்களிலும் இருந்து வருகைத்தந்த இந்து குருமார்களுடன் ஊடகவியலாளர்கள், கல்வி சமூகத்தினர், சமூக சேவையாளர்கள், ஆலய பரிபாலன சபையினர், கலைஞர்கள் மற்றும் வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் நூல் வெளியீடு, புத்தகக் கண்காட்சி, சிறப்பு ஆன்மீக உரை. கலை நிகழ்வு ஆகியவற்றுடன் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.














# இன்றைய ராசி பலன்கள் - 01.04.2024




உங்கள் ஆற்றலை குறைக்கும் விதத்தில் உங்கள் மனதில் அவநம்பிக்கையான உணர்வுகள் தோன்றும்.நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் செயல்பட்டால் நீங்கள் சாதகமான பலன்களைப் பெறலாம்.

இன்று பணிச்சுமை கடினமாக காணப்படும்.இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.ஆரோக்கியக் குறைபாடு காரணமாக உங்கள் பணிகளை விரைந்து ஆற்ற இயலாது.

நீங்கள் ஆவேசமான மன நிலையில் காணப்படுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே அதனை தவிர்ப்பது நல்லது.

இன்று குறைவான பண வளர்ச்சி காரணமாக குறைந்த பண வரவு காணப்படும். பணத்தை திறமையுடன் கையாள வேண்டியது அவசியம்.




இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம். உங்களின் மனநிலையின் மூலம் இது சாத்தியம்.உங்கள்நோக்கம் நிறைவேறும் வகையிலான நல்ல முடிவுகளை நீங்கள் எடுப்பீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் உறுதி காரணமாக உங்கள் பணியில் முன்னனியில் இருப்பீர்கள்.உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்ப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் இனிமையாகப் பேசி இன்றைய நாளை சந்தோஷமாக கழிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் போதுமானதாக இருக்கும். பணத்தை உங்கள் சொந்த தேவைக்கு பயன்படுத்துவீர்கள் மற்றும் சேமிப்பீர்கள்.




இன்று அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும் நாள்.எந்த முயற்சி எடுத்தாலும் அதை குறித்த நேரத்தில் முடிப்பது சிறிது கடினமாக இருக்கும். நீங்கள் பிறரிடம் உரையாடும் போது கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின்பணிச்சூழல் மகிழ்ச்சி அளிப்பதாக காணப்படாது.உங்களின் கடின உழைப்பிற்காக நல்ல பெயரை பெற முடியாத சூழல் காணப்படும்.

உங்கள் துணையால் நீங்கள் புறக்கணிக்கப் படுவது போல உணர்வீர்கள். இம்மாதிரியான உணர்வுகளை தவிர்த்து இன்றைய நாளை சந்தோஷமான நாளாக ஆக்குங்கள்.

அதிகரிக்கும் குடும்ப பொறுப்புகள் காரணமாக இன்று அதிகமாக செலவு செய்ய நேரும்.உங்கள் தந்தையின் உடல் நலனுக்காக செலவு செய்ய நேரும்.




இன்று சற்று அனுகூலமற்ற நாளாக இருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இயலாத நிலை இருக்கும். இன்று பொறுமை அவசியம். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடச் சூழலில் சுமூகமான நிலை இருக்காது. சக பணியாளர்களுடனான தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்படும்.

இன்று முழுவதும் உங்கள் துணையுடன் அமைதியாக கட்டுப்பாட்டுடன் பழகுங்கள். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்கும் வகையில் நாவடக்கம் மேற்கொள்ளுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளுக்காக கடன் வாங்குவீர்கள்.




இன்று சிறந்த நாளாக இருக்கும். நீங்கள் இன்று விரைந்து செயலாற்றுவீர்கள். இதனால் திருப்தி ஏற்படும். இன்று பயணங்களால் ஆதாயம் ஏற்படும். இன்று வளர்ச்சி பெறுவது உறுதி.

இன்று சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மும்மரமாக ஈடுபடுவீர்கள். உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள்.

உங்கள் நலன் குறித்த முக்கிய முடிவு எடுக்க உங்கள் துணை உங்களுக்கு வழி காட்டுவார். இதனால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும். நிதிநிலை சுதந்திரமாக இருக்கும். பணத்தை நகை மற்றும் ஆடம்பர பொருட்கள் வாங்குவதற்கு பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.




இன்று உங்களுக்கு முன்னேற்றம் எளிதில் கிடைக்கும்.சிறிதளவு முயற்சியாயினும் வெற்றி நிச்சயம்.உங்கள் திறமை வெளிஉலகத்தில் பளிச்செனத் தெரியும்.இன்று தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

இன்று பணிகள் மிக அதிகமாக இருப்பதைக் காண்பீர்கள். உங்கள் திறமைகளை வெளிப்படுத்த புதிய வாய்ப்புக்களுக்கு நீங்கள் முயலலாம்.

உங்கள் துணையிடம் மனம் திறந்து பேசுவீர்கள். இது உங்கள் துணையை திருப்திபடுத்தும்.

இன்று உங்களிடம் பணம் மிகுதியாக காணப்படும். அதை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். மனதில் காணப்படும் தைரியம் மற்றும் திருப்தி காரணமாக உங்கள் ஆரோக்கியம் இன்று சிறப்புடன் காணப்படும்.




இன்று சிறந்த வளர்ச்சி காணப்படும்.உங்கள் சிறிய முயற்சியின் மூலம் பெரிய வெற்றி காண்பீர்கள்.இன்று நீங்கள் மிகுந்த நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணி சம்பந்தப்பட்ட முக்கியமானசந்திப்பில்நீங்கள்மூழ்கியிருப்பீர்கள்.இந்த சந்திப்பில் உங்கள் உரையாடலைக் கண்டு உங்கள் சகபணியாளர்கள் ஆச்சரியமடைவார்கள்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் பழகுவீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

இன்று சீரான ஆரோக்கியம் காணப்படும். தேக ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும்.




இன்று அசௌகரியங்கள் காணப்படும்.அதற்கு உங்கள் மனஅழுத்தங்கள் காரணமாக இருக்கலாம். மனஅழுத்தத்தைக் குறைக்க நல்ல இசையை கேட்பது திரைப்படங்கள் பார்ப்பது போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளுங்கள்.மகிழ்ச்சி கிடைக்கும்.

உங்கள் பணிகளை சமாளிப்பது கடினமாக காண்பீர்கள்.எனவே திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றிக்கு வழி கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணச்சிவசப்படுவீர்கள். இது உறவில் அமைதியையும் நல்லினக்கதையும் பாதிக்கும்.இன்று பணத்தை கையாள்வது கடினமாக இருக்கும். பண இழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. பதற்றம் காரணமாக நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உருவாகலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.01.2024

## தனுசு

இன்று மந்தமாக காணப்படுவீர்கள். சுறுசுறுப்புடன் இருக்க வேண்டியது அவசியம்.நல்லதையே நினையுங்கள்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் சில ஏமாற்றங்களோ அல்லது தடைகளோ காணப்படும். உங்கள் சகபணியாளர்களுடனான உங்கள் தொடர்பாடல் நற்பலன்களை அளிக்காது.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடக்க வாய்ப்புள்ளது. இதனை தவிர்த்து நட்புடன் பழகுவது நல்லது.

இன்று செலவுகள்தவிர்க்க முடியாது. எனவே செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படாது. முதுகு வலி மற்றும் இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது

## கும்பம்

இன்று துடிப்பான நாளாக இருக்கும். உங்கள் இலட்சியங்களை அடைவதற்கு உகந்த நாள்.நீங்கள் உங்களுக்கென சில செயல்களை அமைத்துக் கொண்டு அதில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் சகபணியாளர்களுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் பழகுவீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.இன்று பணம் மிகுதியாக காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் நல்ல காரியங்களுக்கு பயன் செய்வீர்கள்.

இன்றைய நாள் உங்களுக்கு சௌகரியங்கள் வழங்கும் என்பதால் நீங்கள் இன்று நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## மகரம்

இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும்.நீங்கள்செய்யும் செயல்கள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக முடியும்.நீங்கள் நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.உங்கள் திறமைகள் பாராட்டைப் பெறும். உங்கள் செயல்திறன் மூலம் உங்களுக்கு கூடுதல் நன்மைகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான நினைவுகளை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். அதிகப்படியான ஆற்றல் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்புடன் வைத்திருக்கும்.

## மீனம்

இன்று குறைந்த பலன்களே கிடைக்கும்.இன்று சில ஏமாற்றங்களைக் காண்பீர்கள்.எல்லாவற்றையும் நட்பு முறையோடு அணுகுங்கள்.

நீங்கள் அதிகமாக பணியாற்ற வேண்டியிருக்கும்.அது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.பணியாற்றும் முறையை திட்டமிட்டுஅதற்கேற்றாற் போல செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். இனிமையான வார்த்தைகளைப் பேச வேண்டும். துணையின் விருப்படி நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. பணத்தை கவனமுடன் கையாள வேண்டும்.உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean Group of Companies
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thamilan Group Chairman
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
HEAD OFFICE No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04. Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546
JAFFNA OFFICE No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna. Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park